உ

சரவஸ்வதிதுணை.

# கம்பரருளிச்செய்த
# சரஸ்வதியந்தாதி.

திருப்போரூர்
டி. கோபால் நாயகர்
அவர்களாற்றமது
மதருஸ், என். சி.
கோள்டன் அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதருஸ் என். சி.

1914

சரஸ்வதிதுணை.

கம்பரருளிச்செய்த

# சரஸ்வதியந்தாதி.

காப்பு - வெண்பா.

ஆயகலைக ளறுபத்து நான்கினையு
மேய வுணர்விக்கு மென்னம்மை—தூய
உருப்பளிங்குபோல்வாளென் னுள்ளத்தினுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்.

படிக நிறமும் பவளச்செவ் வாயுங்
கடிகமழ்பூந் தாமரைபோற்கையுந்-துடியிடையும்
அல்லும் பகலு மனவரத முந்துதித்தாற்
கல்லுஞ்சொல் லாதோ கவி.

—(*)—

கட்டளைக்கலித்துறை

சீர்தந்தவெள்ளிதழ்ப் பூங்கமலாசனத் தேவிசெஞ்சொற்
றூதந்தவென்மனத் தாமரையாட்டி சரோருகமேற்
பார்தந்தநாத னிசைதந்தவாரணப் பங்கயத்தாள்
வார்தந்தசோதியம் போருகத்தாளை வணங்குதுமே.

வணங்குஞ்சிலை நுத லுங்கழைத்தோளும் வனமுலைமேற்
சுணங்கும்புதிய நிலவெழுமேனியுந் தோட்டுடனே
பிணங்குங்கருந்தடங் கண்களுநோக்கிப் பிரமனன்பா
லுணங்குந்திருமுன்றிலாய் மறைநான்கு முரைப்பவளே.

உரைப்பாருரைக்குங்கலைகளெல்லாமெண்ணி லுன்னையன்றித், தரைப்பாலொருவர் தரவலரோதண் டரள முலை, வரைப்பா லமுதுதந் திங்கெனை வாழ்வித்த மாமயிலே, விரைப்பா சடைமலர் வெண்டாமரைப்பதி மெல்லியலே. (௯)

இயலானதுகொண்டு நின்றுநாமங்களேத்துதற்கு
முயலாமையாற்றடு மாறுகின்றேனிந்த மூவுலகுஞ்
செயலரலமைத்த கலைமகளேநின் றிருவருளுக்
கயலாவிடாம லடியேனையுமுவந் தாண்டருளே. (௰)

அருக்கோதயத்தினுஞ்சந்த்ரோதயமொத்தழகெறிக்குந், திருக்கோலநாயகி செந்தமிழ்ப் பாவை திசைமுகத்தா, விருக்கோதுநாதனுந் தானுமெப்போது மினிதிருக்கு, மருக்கோலநாண்மலராளென்னையாளுமடமயிலே.

மயிலேமடப்பிடி யேகொடியேயிள மான்பிணையே
குயிலேபசுங்கிளியே யன்னமேமனக் கூரிருட்கோர்
வெயிலேநிலவெழு மேனிமின்னேயினி வேறுதவம்
பயிலேன்மகிழ்ந்து பணிவேனுனதுபொற்பாதங்களே.

பாதாம்புயத்திற் பணிவார்தமக்குப் பலகலையும்
வேதாந்தமுத்தியுந் தந்தருள்பாரதி வெள்ளிதழ்ப்பூஞ்

சீதாம்புயத்தி லிருப்பாளிருப்பவன் சிந்தையுள்ளே
யேதாம்புவியிற் பெறலரிதாவ தெனக்கினியே. (எ)

இனிதா ளுணர்வ தெண்ணெண் கலையாளை யிலகு
தொண்டைக், கனிநானுஞ் செவ்விதழ்வெண் ணிறத்தா
ளைக் கமலவயன், றனிநாயகியை யகிலாண்ட மும்பெற்ற
தாயைமனப், பனிநாண்மலருறை பூவையையாரணப்பா
வையையே. (அ)

பாவுந்தொடையும் பதங்களுஞ்சீரும் பலவிதமா,
மேவுங்கலைகள் விதிப்பாளிடம்விதி யின்முதிய
நாவும்பகர்ந்ததொல் வேதங்களுன்கு கறுங்கமலப்
பூவுந்திருப்பதம் பூவாலணிபவர் புந்தியுமே. (௯)

புந்தியிற்கூரிரு ணீக்கும்புதிய மதியமென்கோ, வந்
தியிற்றோன்றிய தீபமென்கோநல் லருமறையோர், சந்தி
யிற்றோன்றுந் தபனனென்கோமணி த்தாமனென்கோ,வு
ந்தியிறதோன்றும் பிரான்புயந்தோயு மொருத்தியையே.

ஒருத்தியையொன்றுமிலாவென்மனத்தி லுவந்துத
ன்னை, யிருத்தியைவெண்கமலத் திருப்பாளையெண் ணெ
ண்கலைதோய், கருத்தியையைம்புலனுங் கலங்காமற்கருத்
தைபெல்லாந் திருத்தியை யான்மறவேன் றிசைநான்மு
கன் றேவியையே. (கக)

தேவருந்தெய்வப் பெருமானுநான்மறை செப்புகின்ற
மூவருந்தானவ ராகியுள்ளோரு முனிவரரும்

யாவருமேனைய வெல்லாவுயிரு மிதழ்வெளுத்த
பூவருமாதி னருள்கொண்டுஞானம் புரிகின்றதே.

புரிகின்றசிந்தையி னூடேபுகுந்து புகுந்திருளை
யரிகின்றதாய்கின்ற வெல்லாவறிவி னரும்பொருளைத்
தெரிகின்றவின்பங் கனிந்தூறிநெஞ்சந் தெளிந்துமுற்ற
விரிகின்றதெண்ணெண்கலைமானுணர்த்தியவேதமுமே.

வேதமும்வேதத்தினந்தமுமந்தத்தின்மெய்ப்பொருளாம், பேதமும்பேதத்தின் மார்க்கமு மார்க்கப் பிணக்கறுக்கும், போதமும்போத வுருவாகியெங்கும் பொதிந்தவிந்து, நாதமும்நாதவண்டார்க்கும்வெண்டாமரை நாயகமே. (கச)

நாயகமான மலரகமாவது ஞானவின்பச்
சேயகமான மலரகமாவதுந் தீவினையா
லேயகமாறி விடுமகமாவது மெவ்வுயிர்க்குந்
தாயகமாவதுந் தாதார்சுவேத சரோருகமே. (கரு)

சரோருகமேதிருக் கோயிலுங்கைகளுந் தாளிணையு
முரோருகமுந்திரு வல்குலுநாபியு மோங்கிருள்போற்
சுரோருகஞ்சூழ்ந்த வதனமுநாட்டமுஞ் சேயிதழு
மொரோருகமீரரை மாத்திரையான வுரைமகட்கே. ()

கருந்தாமரைமலர் கட்டாமரைமலர் காமருதா
ளருந்தாமரைமலர் செந்தாமரைமல ரரலயமாந்
திருந்தாமரைமலர் வெண்டாமரைமலர் தாவிலெழிற்
பெருந்தாமரைமணக்குங் கலைக்கூட்டப் பிணைதனக்கே.

தனக்கேதுணிபொருளென்னுந்தொல்வேதஞ்சதுர்முகத்தோ, னெனக்கே சமைந்த வபிடேகமென்னு மிமையவர்தா, மனக்கேத மாற்றி மருந்தென்பசூடு மலரென்பன்யான், றனக்கே சபந்தக் கலைமங்கைபாத கமலங்களே. (கஅ)

கமலந்தனிலிருப்பாள் விருப்போடங் கரங்குவித்துக்
கமலங்கடவுளர் போற்றுமென்பூவை கண்ணிற்கருணை
கமலந்தனைக்கொண்டு கண்டொருகாற்றங்கருத்துள்வைப்பார், கமலங்கழிக்குங் கலைமங்கையாரணி காரணியே.

காரணன்பாகமுஞ் சென்னியுஞ்சேர்தரு கன்னியரு
நாரணனாக மகலாத்திருவுமோர் நான்மருப்பு
வாரணன்றேவியு மற்றுள்ளதெய்வ மடந்தையரும்
ஆரணப்பாவை பணித்தகுற்றேவ லடியவரே. (உ0)

அடிவேதநாறுஞ் சிறப்பார்ந்தவேத மனைத்தினுக்கு
முடிவேதவளமு முளரிமின்னே முடியாவிரத்ன
வடிவேமகிழ்ந்து பணிவார்தமது மபிலிரவின்
விடிவேயறிந்தென்னை யாள்வார்தலந்தனில் வேறிலையே.

வேறிலையென்று னடியாரிற்கூடி விளங்குநின்பேர்
கூறிலையானுங் குறித்துநின்றே னைம்புலக்குறும்பர்
மாறிலைகள்வர் மயக்காமனின்மலர்த் தாணெறியிற்
சேறிலையீந்தருள் வெண்டாமரைமலர்ச் சேயிழையே.

சேதிக்கலாந்தர்க்க மார்க்கங்களெவ்வெவர் சிந்தனையுஞ்
சோதிக்கலாமுறப்போதிக்கலாஞ்சொன்னதேதுணிந்து
சாதிக்கலாமிகப் பேதிக்கலாமுத்தி தானெய்தலா
மாதிக்கலாமயில வல்லிபொற்றுளை யடைந்தவரே. ()

அடையாளநாண்மல ரங்கையிலேடு மணிவடமு
முடையாளை நுண்ணிடை யொன்றுமிலாளை யுபநிடதப்
படையாளையெவ்வுயிரும் படைப்பாளைப் பதுமநறுந்
தொடையாளையல்லது மற்றினியாரைத் தொழுவதுவே.

தொழுவார்வலம்வருவார் துதிப்பார்தந்தொழின்மறந்து
விழுவாரருமறை மெய்தெரிவாரின்ப மெய்புளகித்
தழுவாரினுங்கண்ணி னீர்மல்குவாரென்க ளுவதென்னை
வழுவாதசெஞ்சொற் கலைமங்கைபாலன்பு வைத்தவரே.

வைக்கும்பொருளுமில் வாழ்க்கைப்பொருளுமற் றெப்பொருளும், பொய்க்கும் பொருளன்றிநீடும்பொருளல்லபூதலத்தின், மெய்க்கும்பொருளு மழியாப்பொருளும் விழுப்பொருளு, முய்க்கும்பொருளுங்கலைமானுணர்த்து முரைப்பொருளே. (உசு)

பொருளா லிரண்டும் பெறலாகு மென்ற பொருள் பொருளோ, மருளாதசொற்கலை வான்பொருளோ பொருள்வந்துவந்தித், தருளாய்விளங்கு மவர்க்கொளிபாயறியாதவருக், கிருளாய்விளங்கு நலங்கிளர் மேனியி லங்கிழையே. (உஎ)

இலங்குந்திருமுகமெய்யிற்புளகமெழுங்கண்கணீர்,
மலங்கும்பழுதற்ற வாக்கும்வலிக்கு மனமிகவே, துலங்
குமுறுவல் செயக்களிகூருஞ் சுழல்புனல்போற், கலங்
கும்பொழுது தெளியுஞ்சொன்மானைக் கருதினர்க்கே.()

கரியாரளகமுங் கண்ணுங்கதிர்முலைக் கண்ணுஞ்செய்ய
சரியார்கரமும் பதமுமிதழுந் தவளநறும்
புரியார்ந்ததாமரை யுந்திருமேனியும் பூண்பனவும்
பிரியாதென்னெஞ்சினு நாவினுநிற்கும் பெருந்திருவே.

பெருந்திருவுஞ்சய மங்கையுமாகியென் பேதைநெ
ஞ்சி, விருந்தருளுஞ் செஞ்சொல் வஞ்சியைப் போற்றி
லெல்லாவுயிர்க்கும், பொருந்தியஞானந்தருமின்பவேதப்
பொருளுந்தருந், திருந்தியசெல்வந் தருமழியாப்பெருஞ்
சீர்தருமே. (௩௰)

சரஸ்வதியந்தாதி

முற்றிற்று.